ஓம் சரவண பவ

ஓங்காரக்குடிலுக்கும் ஓங்காரக்குடிலின் நிர்வாகத்திற்கும்
உயர் தொண்டர் பெருமக்கட்கும் அன்னதானத்திற்கும்
அரங்கமகானின் மிதுன திங்களுக்கு உண்டான அருளாசி விளக்கம்

**ஆறுமுக அரங்கமகா தேசிகர் அவர்களின் ஆசி அறிவுரை நூல்**

09.07.2024

1. கருணையே வடிவான வேலவன் திருவடி பற்றி
கலியுகத்தில் அரங்கன் யான் அவதாரம்
பெருமைமிக்க ஆறுமுக அரங்கமகானாக
பேருலகில் பிரணவக் குடில் படைத்து

2. படைத்துமே உலகோர்க்கு சன்மார்க்க
பழுதில்லா ஞானவழி காட்டி அருள
தடையற ஆறுமுகன் அருளாசியாக
தக்கபடி ஆற்றலாக சரவணஜோதி கலந்து

3. மாறுதலை உலகில் நடத்தவே
மகான் அரங்கன் யானும்
இதுகாலம் அருளாசி தன்னை
தன்னையே ஓங்காரக்குடிலுக்கும்

4. தக்க நிர்வாகத்திற்கும் தொண்டர்
பெருமக்கட்கும் குடிலின் அன்னதானத்திற்கும்
பெருமைபட ஆசிதனை அருளுவேன்
பிசகின்றி குரோதி மிதுன திங்களில்

5. ஆற்றல்பட சர்வபலம் கூடிட அருளுவேன்
அப்பனே ஓங்காரக்குடிலும்
அரங்கன் யான் பரிபூரண சக்திபட
ஆற்றலோடு இயக்கி வருதலுற

6. வகைபட எக்காலமும்
வல்லமைபட குடிலுக்கு உண்டான
உலகோர் தொடர்பும்
தடையில்லாமல் குடிலின் செயல்பாடுகளும்

7. தக்கபடி தொடர்ந்து மாதாந்திர
நிகழ்வும் விழாக்களும்
அரங்கன் ஆசியோடு
அரங்கன் என் ஆசியோடு

8. தடையற சிறப்புற நடந்தேற
பரிபூரண ஆசி உண்டு
ஆசி தந்தேன் நிர்வாகத்திற்கும்
ஆற்றலாக அரங்கன் யான்

9. சூட்சும பலம் கூட்டி
வகைபட நிர்வாக மாந்தர்கள் வழியும்
வல்லமைமிக்க குழுக்கள் மூலமும்
இணைந்து செயல்படுகின்ற தொண்டர்கள் மூலமும்

10. எல்லா சக்தியுமாக அரங்கன் யான்
உள்ளிருந்து இயக்கி வருகின்றேன்
வருகவே குடிலின் தொண்டுக்கும்
வல்லமைமிக்க அன்னதான சேவைக்கும்

11. தருகின்ற உயர்குண மாந்தர்களை
தக்கபடி ஞானவான்களை
பெருமைமிக்க செல்வந்தர்களை சீமான்களை
பிரணவக் குடில் நோக்கி

12. அரங்கன் யான் வரச் செய்து
செய்துமே தர்மத்திற்குண்டான
தடையற பொருளாதாரம் பெருக்கி
வருமுலகில் செய்து வருகின்ற

13. ஓங்காரக்குடில் அன்னதான சேவையோடு
வளர்ந்தோங்கி கிராமம் மற்றும் பிறதடங்களிலும்
வகைபட துறையூரை சார்ந்து
உள்ள விரிவு எல்லைகள் அத்தனைக்கும்

14. வல்லமைபட அரங்கன் என் தர்மம்
வளர விரிவுபட செய்யவும் அருள் செய்வேன்
அதற்குண்டான பொருளாதார பலம் கூட்டி
அன்பர்கள் படையையும் பெருக்கி

15. வகைபட தர்மத்தின் அளவை கூட்டி
வல்லமைபட எல்லையை விரிவாக்கி
அரங்கன் யான் அதற்குகந்த
தொண்டர் படையும் பொருளாதார பலமும்

16. அளவிலா பெருக்கி அற்புதம் பட
நிர்வாகம் சிறக்கவும் ஓங்காரக்குடிலின்

புகழ் உலகெல்லாம் பரவவும்
உகந்தபடி அரங்கன் வழிவகை செய்து துணை நிற்பேன்

17. நிற்கவே என் சக்தி சூட்சுமமாக
நிலமதனில் ஓங்காரக்குடிலில்
புஜண்ட மகரிஷி மண்டபத்தில்
அன்பர்கள் தொடர்ந்து நடத்துகின்ற

18. குரு பூஜை ஆற்றல் கூடி
அகிலமெங்கும் உள்ள அன்பர்களை
மகா சக்தியாக வரவழைத்து
அற்புதம் கூட்டி அவர்கள் மூலமும்

19. அரங்கன் இறங்கி சேவைகள் வளரவும்
சன்மார்க்க நிலைகள் உயரவும்
தக்கபடி இன்னும் பல
அகத்தியர் சன்மார்க்க சங்கத்தின்

20. கிளைகள் பெருகவும் அற்புதம் நிகழ்த்துவேன்
அரங்கன் என் அருளாசிபட
ஆற்றலோடு நிர்வாகம் சிறக்கவும்
தொண்டர்களெல்லாம் மகிழ்வோடு

21. நிறைவோடு தொண்டில் கலந்து
செயல்பாடுகள் எப்பொழுதும்
குன்றாத வண்ணம் சிறக்கவும்
வழிவகை செய்வேன்

22. தர்மத்திலும் செயல்பாட்டிலும்
பயண பாதுகாப்பிலும் பழுதின்றி
அரங்கன் துணை நின்று
பேரருள் புரிவேன் அருளாசி விளக்கம் முற்றும் முற்றே.

—சுபம்—